# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :28 October 2025
கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in



நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# அகத்தினுள்

**ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்**
**முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2**

**குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்**
**மெ.பேபி நிஷாந்தினி**

**பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்**
**ப.ராம்குமார்**

**புறநானூற்றில் உயிரியல் செய்திகள்**
**எம்ஜிராமச்சந்திரன். வெ**

**புறநானூற்றில் தமிழர் பண்பாடு**
**திருமதி கா.சுகன்யா,**

**செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு**
**இரா.சினேகலதா**

**திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்**
**முனைவர் இரா.ஜெய்சங்கர்**

**திருக்குறளில் மருத்துவச் செய்திகள்**
**முனைவர் சல்மா மஹஜபீன் த. மு**

**திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை**
**க.நித்தியா**

**அபிராமி அந்தாதி - ஒரு பார்வை**
**சா.கஸ்தூரி**

**வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்**
**முனைவர் த. சுபஜா**

**வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை**
**முனைவர்ப.தனஞ்செயன்**

**தெய்வங்களும் கோவில்களும்**
**அ.அறிவுக்கொடி**

**பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்**
**க.கார்த்திகா**

**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வெளவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

**பொதிகைமலையின் ஆயண்டிரன்**
**முனைவர் த. முத்துலட்சுமி**

**பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்**
**கி.தமிழரசி**

**பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்**
**ம.கலைச்செல்வன்**

**இலக்கியங்களும் பசிப்பிணியும்**
**முனைவர் ப. மணிகண்டன்**

**அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்**
**முனைவர் அ.புஷ்பா**

**கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்**
**கு.நிவேதா**

**மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு**
**முனைவர் ஈ. இசக்கியம்மாள்**

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

**திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.**
**(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)**
**திரு. விசுமாப்போடி சசிகரன்**

**பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி**
**முனைவர் வே.இரவி**

**கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்**
**முனைவர் அ. மதலேன்**

**சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்**
**முனைவர்அ. அமுல்ராஜ்**

**பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**

**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**



# தமிழ்

# *Strategies used in the novel Kookai*

*Author: R.Rajesh Kumar, Part-time Doctoral Researcher, Registration No: BDU2220632779759, Department of Tamil Studies, Government Arts College (Autonomous), Affiliated to Bharathidasan University, Karur-5, Tamil Nadu, India.*
*ORCID:https://orcid.org/0009-0003-1443-6331*
*Supervisor: Dr. E. Karpagam, Associate Professor, Department of Tamil Studies, Government Arts College (Autonomous), Affiliated to Bharathidasan University, Karur-5, Tamil Nadu, India.*
*ORCID:https://orcid.org/0009-0002-3820-6656*

***Abstract***

*The basis for the success of a literary work is the literary elements that are built into it. Creative literature can be said to be based on various types of life experiences. The author who creates literature instills an artistic feeling in the reader with his life experiences. He creates it with various types of artistic skills so that the reader can understand the feelings that have arisen in his mind. The artistic skills that are established in this way are called technique. When examining a piece of literature, two types of perspectives are essential in that literature: what the creator says and how he says it. How he says it can be said to be the creator's artistic skill and artistic technique. Its meaning stands out in knowing what the writer is saying. It is even better to say it in a way that the reader can remember. A person who is good at thinking and acting expresses his thoughts in many ways. Poems, stories, plays, articles, and novels are the imagination of a writer. The technique and language of the story are essential to the content of a story. A story reaches a special level through strategy. In this way, this article examines the strategies used in Cho. Dharman's novel Kookai.*

***Key words:*** *Kookai, strategies, code, proverb, language style, novel.*

## கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்

கட்டுரையாளர்: **இரா.ராஜேஷ் குமார்**, பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: BDU2220632779759, தமிழாய்வுத்துறை, அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, கரூர்-5, தமிழ்நாடு, இந்தியா.

நெறியாளர்: **முனைவர் எ. கற்பகம்,** இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, கரூர்-5, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**

ஓர் இலக்கியப் படைப்பில் வெற்றிக்கு அடிப்படையாக விளங்குவது அதில் கட்டமைக்கப்படும் இலக்கிய கூறுகள் ஆகும். பல்வேறு வகையான வாழ்க்கை அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டது படைப்பிலக்கியம் எனலாம். இலக்கியம் படைக்கும் ஆசிரியர் தமது வாழ்க்கை அனுபவங்களைக் கொண்டு கலை உணர்வை வாசகனுக்கு ஊட்டுகிறார். தமது எண்ணத்தில் தோன்றிய உணர்வுகளைப் படிப்பவர் மனம் புரிந்து கொள்ளும் வகையில் பல்வேறு வகையான கலைத் திறன்களைக் கொண்டு படைக்கின்றார். இவ்வாறு அமைக்கப்படும் கலைத் திறன்கள் உத்தி என்று அழைக்கப்படுகிறது. ஓர் இலக்கியத்தை ஆராயப்படும்போது அந்த இலக்கியத்தில் படைப்பாளர் என்ன சொல்கிறார், எப்படிச் சொல்கிறார் என்ற இரு வகையான நோக்கு இன்றியமையாதது. எப்படிச் சொல்கிறார் என்பதே படைப்பாளரின் கலைத்திறன் என்றும், கலைநுட்பம் என்றும் கூறலாம். எழுத்தாளன் என்ன சொல்லுகிறான் என்றறிவதில் அதன் பொருள் சிறந்து நிற்கின்றது. அதையே படிப்போர் மனதில் பதியும்படிச் சொல்வது மேலும் சிறப்பானதாகும். சிந்தித்துச் செயல்படுவதில் சிறந்தவனான மனிதன் தன் சிந்தனைகளைப் பலவாறு வெளிப்படுத்துகிறான். ஓர் எழுத்தாளனின் கற்பனைத் திறன்தான் கவிதைகள், கதைகள், நாடகங்கள், கட்டுரைகள், புதினங்கள் ஆகும். ஒரு கதையின் உள்ளடக்கப் பொருளுக்கு இன்றியமையாததாக கதையின் உத்தியும், மொழிநடையும் அமைகின்றன. உத்தியினால் ஒரு கதைச் சிறப்பு நிலையை அடையும். அவ்வகையில் சோ.தர்மனின் கூகை புதினத்தில் கையாண்ட உத்திமுறைகள் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்:** கூகை, உத்திகள், குறியீடு, பழமொழி, மொழிநடை, புதினம்.

**முன்னுரை**

படைப்பாளன் மனதில் தோன்றும் கருவானது கவிதை, கதை, புதினம் கட்டுரை எனப் பல வடிவங்கள் பெறுகின்றன. உத்திகள் கதையில் எதிர்பார்ப்பைத் துண்டுபவையாக அமைகின்றன. இலக்கியத்தின் உள்ளடக்கப் பொருளைச் சொல்லுவதற்கு உத்திகளே துணைபுரிகின்றன. ஒரே எழுத்தாளனின் பல்வேறு படைப்புகளுக்கிடையே அவனது உத்தி முறைகள் வேறுபடுகின்றன. படைப்பாளிகள் ஒவ்வொருவரும் தமக்கே உரிய தனித் தன்மையோடுப் படைப்பை வெளிக்கொணருகின்றனர். அத்தகைய வெளிப்பாட்டு முறையே உத்தி எனப்படுகிறது. உணர்ச்சி வெளிப்பாட்டுச் சாதனமாகிய இலக்கியத்தில் உணர்ச்சி சிக்கலைக்காட்டி மேலான ஒரு வாழ்க்கைக்கு வழிகோலுவது அவசியாம் என்ற நிலையில்

பல்வேறு உத்திகள் இவரதுப் புதினத்தில் எடுத்தாளப்பட்டுள்ளன. இவரது கூகை புதினத்தில் காணலாகும் உத்திமுறைகளை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது

**உத்தி — விளக்கம்**

உத்தி என்றால் ஒரு செயலைச் சிறப்பாகச் செய்ய அல்லது ஓர் இலக்கை அடைய பயன்படுத்தப்படும் வழிமுறை ஆகும். இது திட்டமிட்டச் செயல் அல்லது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையைக் கையாளுவதற்கான ஒரு நுட்பம் ஆகும். ஒரு நூலில் உத்தி என்பது கருத்தை விளக்குவதாகவும் படிப்பவரின் புரிதலை அதிகரிப்பதற்காகவும் பயன்படுத்தப்படும் ஒரு முறையாகும். தொல்காப்பியர் உத்தியின் அணுகு முறையை,

**ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்**

**நுதலிய தறிதல்அதிகார முறையே**

**தொகுத்துக்கூறல் வகுத்து மெய்ந்நிறுத்தல்**

**மொழிந்த பொருளோ டொன்ற வைத்தல்(தொல்காப்பியம், நூற்பா.656)**

என்ற நூற்பாவில் செய்திகளை அங்கும் மிங்கும் ஒப்பிட்டு பார்த்துக் கொள்வது ஒத்த காட்சி என்று குறிப்பிடுகிறார்.

பாரதியார், தாம் கவிதையில் சொல்ல முடியாத சிலச் செய்திகளை வசன கவிதை வடிவத்திலும், சிந்து, கண்ணி, போன்ற வடிவத்தில் கூறுவது கூட ஒருவகை உத்தி தான் என்கிறார்.

**படைப்பாளன் தான் கூறவந்த செய்தியான உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும் முறையே உத்தி எனலாம் (டாக்டர் ந. பிச்சமுத்து. இலக்கியத் திறனாய்வும் கொள்கைகளும், ப.4)**

என்கிறார் டாக்டர் ந. பிச்சமுத்து. இதே கருத்தை வலியுறுத்தும் விதமாக,

**படைப்பாளன் தான் சொல்ல வந்த கருத்துக்களைக் கற்பவர் மனத்தில் எளிதில் பதியச் செய்யவும் விளங்க வைக்கவும் கையாளும் முறைகள் உத்தியாகும். (செ.சாரதாம்பாள். செவ்வியல், ப.71)**

என்று செ. சாரதாம்பாள் கூறியுள்ளது இங்கு நோக்கத்தக்கதகும். மேற்குறிப்பிட்ட விளக்கங்களின் அடிப்படையில் புதின இலக்கிய உத்திகள் வரையறுக்கப்படுகின்றன.

**உத்தி வகைகள்**

எல்லா இலக்கியங்களுக்கும் பொதுவானவை எனவும், குறிப்பிட்ட இலக்கியங்களுக்கு மட்டும் உரியவை என்றும் உத்திகள் அமையும். நோக்கு நிலை உத்தி, கதை கூறும் உத்தி, பின்னோக்கு உத்தி அல்லது நனவோடை உத்தி, குறியீட்டு உத்தி, கடித உத்தி, கனவு உத்தி, கற்பனை நிகழ்வியல் உத்தி, காட்சிப்படுத்துதல் உத்தி, வருணனை உத்தி, தென்மம் உத்தி, மொழிநடை உத்தி என புதினத்தில் பல உத்திகள் இடம் பெறுகின்றன.

**கதை கூறும் உத்தி**

புதினத்தில் கதைச் சொல்லுதல் என்பது ஒரு கலையாகும். பழைய காலத்தில் கதைக் கூறுதல் என்பது ஒரே ஒரு ஊரிலே என்று தொடங்கும். கதையில் வரும் நிகழ்ச்சியினை வரிசைப்படுத்தி, சுவைபடக் கூறுவது வழக்கம். இந்தக் கதை கூறும் முறை சில காலங்களுக்கு வெற்றிகரமாக நிகழ்ந்தது. பிறகு இந்த முறையில் சலிப்பு ஏற்பட்ட பொழுது புதிய முறைகளை எழுத்தாளர்கள் கையாளத் தொடங்கினர். கதை நல்ல முறையில் எழுதப்படவும், வாசகர்களைக் கதைக்குள் முழுமையாகக் கவர்ந்திழுக்கவும் சில உத்திகளை புதின ஆசிரியர் பின்பற்றுவர். அந்த உத்திகளுக்குக் கதை கூறும் உத்தி என்று பெயர். இதனைக் கதை கூறும் முறை என்றும் கூறுவர். கதை கூறும் முறையை ஆசிரியரே கதை கூறல், கதைமாந்தர் கதை கூறல் என்று இரு வகையாகப் பிரிக்கலாம்.

**ஆசிரியரே கதை கூறல்**

புதினத்தில் ஆசிரியர் கதை கூறுதல் என்பது எழுத்தாளரே நேரடியாக கதையைச் சொல்லி ஒவ்வொரு நிகழ்வையும் பார்வையாளராக இருந்து பார்ப்பதுப்போல் விவரிக்கும் ஓர் உத்தியாகும். இது எடுத்துரை உத்தி என்றும் அழைக்கப்படுகிறது. அதாவது ஆசிரியர் கதையைத் தானே எடுத்துரைக்கும் முறையில் கதை கூறுவது ஆகும். ஆசிரியர் தனியே படர்க்கை நிலையில் நின்று, தான் ஒவ்வொரு நிகழ்வையும் அருகே இருந்து பார்ப்பதுப் போல் கதையைக் கூறிச் சொல்லும் முறை. கதையை ஒருவர் சொல்ல இன்னொருவர் கேட்பது போல இம்முறை இருக்கும். எழுத்தாளர் கதை கூறுபவர் வாசகர் கதையைக் கேட்பவர். தமிழில் பெரும்பாலான புதினங்கள் இம்முறையில் அமைந்தவை. இவ்வாறு கதையை கூறி செல்வதில் கல்கி மிகச் சிறந்தவராவார்.

கூகை புதினத்தில் ஆசிரியர் பல கதைகள் கூறுவதாக அமைற்துள்ளது. அதாவது **“ஒரு ஊர்ல கஷ்டமான கஷ்டம். மழையுமில்ல தண்ணியுமில்ல பஞ்சம்னா அப்பிடிப் பஞ்சம், ஊர்ல எல்லாருமே சாமி கும்புடுறத விட்டுட்டாங்க, விட்டதோட சும்மா இருக்கல கஷ்டம்னா அப்படி கஷ்டம் சாமிய வையிறாங்க, ஆனா அதுல ஒருத்தன் மட்டும் வழக்கம்போல என்னனைக்கும் போல எந்திரிச்சு குளிச்சு திருநீறுபூசி தெனம் சாமியக் கும்புட்டுட்டு வாரான். அத்தன கஷ்டத்துலயும் அவன் சாமி கும்புடுறத ஒரு நாள்கூட நிறுத்தல. ஒருநாள் ராத்திரில இவன் நல்லாக் கொறட்ட விட்டு ஒறங்குறான். திடீர்னு கூரமேலிருந்து போட்டுரட்டா, போட்டுரட்டானு ஒரு சத்தம். தடாப்புடானு எந்திரிச்சுப் பாத்தா ஒண்ணையும் காணும்...(கூகை, ப.32)** என்று கதையைக் கூறிச் செல்வதை காண முடிகின்றது.

**கதைமாந்தர் கதை கூறல்**

புதினத்தில் வருகின்ற தலைமை மாந்தர்கள், துணை மாந்தர்கள் ஆகியோர் தாம் அனுபவித்த, தாம் கண்ட நிகழ்வுகளை ஒரு செய்தியாகக் கூறி வருவர். பாத்திரத்தின் பெயரைத்

தலைப்பாகக் கொண்டு அந்தந்த அத்தியாயம் தொடங்கும். தலைப்பாக இருக்கும் பாத்திரம் தானே தன்னை நான் எனக் கூறிக்கொண்டுக் கதையைச் சொல்லத் தொடங்கும். அப்படிக் கூறுவதால் புதின ஆசிரியரின் இடையீடு இருக்காது. புதினத்தின் சம்பவங்களைக் கூறும்போது கதை சொல்லும் பாத்திரம் தான் கண்ட, கேட்ட அனுபவித்த செய்திகளை கூறவதாக அமைந்திருக்கும்.

கூகை புதினத்தில் வரும் சீனிசாமி கதாபத்திரத்தில் இது என்ன பறவை ஒரு நாளும் இங்க வந்ததில்லை என கேட்ட அக்கயைநாயக்கர் அதற்கு சீனிசாமி, **சாமி இது இரவுப் பறவ. கூகைனு பேரு. வனத்திற்கு உண்மையான அதிகாரமும் சொந்தமும் இந்தப் பறவைக்குத்தான் உண்டு•••**(கூகை, ப.116) என்று கதையை செல்வதாக அமைந்திருப்பதை அறிய முடிகிறது. இதன் மூலம் கதைமாந்தர்களின் கதை கூறல் உத்தியை கையாண்டுள்ளதை அறியலாம்..

**பின்னோக்கு அல்லது நனவோடை உத்தி**

புதின இலக்கியங்களில் ஏறக்குறைய அனைத்துப் படைப்பாளரும் பயன்படுத்தும் உத்தி இதுவாகும். முன்பு நிகழ்த்தும் நிகழ்வுகளை எண்ணிப் பார்ப்பதே இவ்வுத்தியாகும். முன்பு எப்போதோ நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைக் கதை நிகழ்காலத்தில் பின்னோக்கிப் பார்ப்பது பின்னோக்கு உத்தியாகும். இவ்வுத்திக்கு,

> **உணர்ச்சிப் போராட்டம் ஏற்பட்ட காலத்தை அதற்கான காரணங்களை நினைவோட்டமாகப் பின்னோக்கிப் பார்த்து அதனை நிகழ்காலத்துடன் பொருத்திப் பார்ப்பது பின்னோக்கு உத்தி( சி.சு.செல்லப்பா, தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது, ப.147)**

என்று சி.சு.செல்லப்பா கூறுகின்றார்.

கூகை புதினத்தில் சீனியின் கதாபத்திரத்தில் அவரின் ஊரான உப்பத்தூர் செல்ல வேண்டும் என்று நினைக்கும் போது ஊரின் முன்பு நடந்த நிகழ்வுகள் மனதில் ஓடிக்கொண்டே கண் கலங்குகிறான்,

> **தன் தாய் தகப்பன் வாழ்ந்து மடிந்த ஊர் அதுவகும். தான் அழுது புரண்டு அடம்பிடித்துப் புரண்ட வெக்கரித்த மண். குடிக்கத் தண்ணீரின்றி வருடாவருடம் வானம் பார்த்துத் தவமிருக்கும் மக்கள் வாழ்ந்த ஊர் கண்மாயோ, குளங்களோ, கிணறுகளோ இல்லாத ஊர். வயல்கள் இல்லை, தோட்டம் இல்லை, மானாவாரி விளைச்சல் ஒன்றுதான் பிழைப்பாக இருந்தது(கூகை, ப.102)**

என்று பழைய நினைவுகளை சீனி வாயிலாக கூறும் வகையில் நனவோடை உத்தியை கையாண்டுள்ளார். பேச்சிக்கு கால்களை சுற்றும் நீர் பாசிகளைப் போல் பழைய நினைவுகள் ஒவ்வொன்றாக வந்து போனதாக,

> **தான் சொந்த பந்தங்களை விட்டுவிட்டு காளி தேவருடன் ஓடி வந்தது, சுண்ணாம்பு காளவாசலில் வேலை பார்த்தது ,தேவர் தண்ணி வண்டி அடிக்க போனது அப்புறம்**

***கொலை செய்துவிட்டு ஜெயிலுக்கு போனது தேவரை தூக்கில் போட்டது, தான் அனாதையாய் புல்லுக்கு கட்டு சுமந்து, சீரழிந்தது, அப்புச்சுப்பனை காட்டில் சந்தித்தது, அப்புச்சுப்பனையும் அய்யனாரையும் ஜாமினில் எடுத்தது, போலீஸ் சித்திரவதை செய்தது இப்படியே நினைத்துக் கொண்டு புரண்டு புரண்டு படுத்து தூங்கிப் போனால்(கூகை, ப.261)***

என்று ஆசிரியர் கூறுகிறார். பேச்சி தன் வாழ்வை நினைவு படுத்தியதாக படிப்பவர்களுக்கும் நினைவுபடுத்துவற்கான இந்த நனவோடை உத்தியை கதைக்கு ஏற்றவாறு அவ்வபோது பயன்படுத்துவது சிறப்பாகும்.

**காட்சிப்படுத்துதல்**

காட்சிப்படுத்துதல் என்பது விவரித்தல் என்று பொருள்படும். படைப்பாளன் பொருள், இடம், காலம், சூழல், நிகழ்ச்சி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றையோ, பலவற்றையோ காட்சிப்படுத்துதலைக் குறிப்பதாகும். இலக்கியக் கூறுகளில் ஒன்று வருணனை சங்க இலக்கியங்களில் இயற்கைக் காட்சிகள், காட்சியின் பின்புலம் போன்றவை தலைவன், தலைவி தோழி போன்ற பலரின் கூற்றால் வெளிப்படும். இவற்றைப் போன்றே புதினங்களிலும் நிகழ்ச்சிகள், மாந்தரின் தோற்றம், மனநிலை போன்றவற்றைக் காட்சிப்படுத்துதல் வாயிலாகப் பாத்திர இயல்புகளை விளக்கவும், கற்பனை வெளிப்பாட்டிற்கும் படிப்போரின் கண்முன்ளே நிகழ்வுகள் வருவதற்கும் பயன்படுத்துகின்றனர்.

புதினத்தில் நடக்கும் நிகழ்வுகளை, **தூரத்தில் காடுகளில் எங்கோ கூப்பாடு போடும் மயில் கூட்டத்தின் விகார ஒலி பலமாய் கேட்டது. பாதையோர கிடங்கில் கிடந்த கொஞ்சம் தண்ணீரில் சூரியப் பூவாய் நீர் உலுப்பிக் குளித்துக் கொண்டிருந்தன இரண்டு மைனாக்கள். வரிசைப் பனையின் தூர் ஏறிப் பனையைச் சுற்றிப் படர்ந்து மஞ்சளாய் பூத்து மணத்தன பீர்க்கங்கொடிப் பூக்கள். கூவை சாமி கோயில் ஆலமரம் தூரத்தில் குமுக்காய் தெரிந்தது. மஞ்சணத்தி செடிகள் அடர்ந்து இடிந்து கிடந்த கிணற்றில் வாகரையில் பூவரசம் பூக்கள் பூத்துக் குலுங்கின. ஆங்காங்கே காடுகளில் கூட்டம் கூட்டமாய் ஆடுகளும் மாடுகளும் மேகக்கூட்டங்களென அலைந்து கொண்டிருந்தன. (கூகை, ப. 52)** என காட்சிகள் நம் கண்முன்னாடி நடப்பது போல் தோன்றும் வண்ணம் படைப்பாளர் நகர்த்தி செல்வது சிறப்பாகும்.

**தொன்மம்**

தொன்மம்(*Myth*) என்றால் பழங்கதை, புராணம் என்றெல்லம் பொருள் உள்ளது. தொல்காப்பியத்தில்,

**தொன்மை தானே சொல்லுங் காலை**

**உரையொடு புணர்ந்த பழமை மேற்றே (தொல்காப்பியம், செய்யுளியல், நூற்பா.228)**

என்ற நூற்பாடலில் தென்மை என்பது உரையுடன் கலந்து எழுதப்பட்ட மிக பழமையான கதைகளைக் குறிக்கும் என்கிறார். அதாவது தொன்மை வாய்ந்த கதைகள் இலக்கியங்களில் பயன்படுத்தப்படும்போது தொன்மமாகிறது.

கரிசல் வட்டாரத்தில் ஏராளமான புராண, இதிகாசக் கதைகள் வழங்கப்படுகின்றன. அவை பெரும்பாலும் அவ்வட்டார எழுத்தாளர்களால் இலக்கியங்களில் பதிவு செய்யப்படுகின்றன. கி.ரா. குறிப்பிடும் கன்னி தெய்வ வழிபாடு (கோபல்ல கிராமம்), இடைக்காடர் பற்றிய கதை (கிடை) முதலியனவும் பூமணியின் கொம்மை புதினமும் தொன்மத்திற்குச் சான்றாகும்.

கூகை புதினத்தில் **சுப்பிரமணியன் மலையைப் பற்றிச் சீனிக்கிழவன் சொன்ன கதையை அசை போட்டான். சாயமலைக்குப் போகிற வண்டிப்பாதை நீண்டு சென்றது, பச்சிலையின் பெயரை மறந்துபோன அனுமன் அப்படியே வேரோடு சஞ்சீவி மலையைத் தூக்கிக்கொண்டு பறந்து வந்தார். அனுமன் தூக்கி வந்த அந்த மலையில் தான் செத்தவர்களைப் பிழைக்க வைக்கும் அபூர்வ மூலிகை இருந்தது. அந்த மூலிகையின் வாசம் பட்ட உடனேயே ராமனும் லட்சுமணனும் மயக்கம் தெளிந்து எழுந்தார்கள். திரும்பவும் சஞ்சீவிமலையைக் கொண்டுபோய் பழைய இடத்தில் வைக்கச் சோம்பிப் போன அனுமன், தூக்கிப் போட்டு ஒரு எத்து எத்தினார் சஞ்சீவிமலை சில்லுச்சில்லாய் நொறுங்கிச் சிதறி நாலாபுறமும் போய் விழுந்தது. அதில் ஒரு சில்லுதான் இந்தக் கழுகுமலை. மற்றவை குருமலை,சாயமலை, திருவண்ணாமலை, பழனிமலை. (கூகை, ப.23)** என்று பல மலைகள் உருவானதாக ஆசிரியர் குறிப்பிடுவது தொன்ம உத்திக்குச் சான்றாக அமைகின்றன.

**குறியீட்டியல் உத்தி**

இலக்கியத் துறையில் விவாதத்தின் முதன்மையான பகுதிகளுள் ஒன்று குறியீட்டு முறைக் கலைத்திறனாகும். குறியீட்டு முறை இன்னது என விளக்கிக் காட்டுவதில் இலக்கியத் திறனாய்வாளர்கள் ஆழமாக ஈடுபட்டுள்ளனர். காட்சி, உருவகம், குறியீடு ஆகியன ஒன்றோடு ஒன்று தொடர்புற்று இருப்பன. ஆயின் ஒரு நிகராக தகுவன அல்ல.

> **இலக்கியப் படைப்பாளன் மேற்கொள்ளும் உத்திகளுள் குறியீடும் ஒன்று. இலக்கிய இன்பத்தை நுணுகிக் கொண்டோருக்குப் பெருவிருந்தளிப்பது படைப்பாளன் திறனுக்கு மேலும் அழகூட்டுவது மேலை நாடுகளில் சென்ற நூற்றாண்டிலேயே வளம் பெற்று விட்ட போதிலும் தமிழ் இலக்கியத் திறனாய்வில் அண்மைக் காலத்தில் சிறப்புப் பெற்றுள்ளது.(ச.சிவகாமி, இராமயணக் குறியீடுகள, ப.2)**

என்று சிவகாமி குறிப்பிட்டுள்ளதை அறியலாம்.

> ***குறியீடு என்பது சொல்ல வந்ததை நேரடியாகச் சொல்லாமல் சில குறியீடுகளைப் பயன்படுத்தி வாசகர் புரிந்து கொள்ளச் செய்கிறது.(மு.சுதந்திரமுத்து, படைப்புக்கலை, ப.35)***

என்னும் கருத்தினைச் சுதந்திரமுத்துமுன் வைக்கிறார். மேலும் படைப்பாளன் தான் கூறக் கருதிய கருத்தை வேறொன்றின் வாயிலாகப் புலப்படுத்தும் உத்தியினைக் குறியீட்டு உத்தி எனலாம்.

கூகை என்கின்ற கோட்டான் இடப்பெயர்ச்சியில் ஆர்வம் இல்லாத பறவை மிகுந்த வலிமை கொண்டது எனினும் அந்த வலிமையை தன் உணவுக்காக அன்றி வேறு சமயங்களில் பெரிதும் பயன்படுத்துவதில்லை இருளில் வெளிவந்து உலவும் இயல்புடையது பகலிலே அஞ்சி ஒடுங்கி தன் பொந்துக்குள் கிடக்கும் குகையின் தோற்றத்தை அருவருப்பாக பார்ப்பதும் கோரம் என்று முத்திரை குத்துவதும் கூகையை காணுதல் ஆகியும் அதன் குரல் ஒலி கேட்பதையும் ஆபாச குணம் என்று கருதுவதும் இந்த சமூகத்தின் பாரம்பரியமகத் தொடர்ந்து வரும் பொது புத்தி. கூகையை தலித்துகளுக்கான குறியீடுகள் ஆகி சமகால தலித் வாழ்க்கையை படைப்பாக உருவாக்குவதில் பெரும் வெற்றி காண்டுள்ளார். ***சோ.தர்மனின் கூகை புதினம், ஆந்தையை தாழ்த்தப்பட்ட சமூகத்தின் குறியீடாக அமைத்து படைக்கப்பட்ட படைப்பு.***

**பழமொழி**

பழமொழிகள் ஒரு சமூகத்தின் நீண்ட வாழ்வியல் போக்கில் உருவாகும் அனுபவங்களிலிருந்து தோன்றுகின்றன. எனவே பழமொழிகளில் வாழ்வியல் அனுபவம், அறிவு ஆகியன இயல்பாகவே பொதிந்து கிடக்கின்றன. இதனால் தான், ***பழமொழி எனும் சொல்லே ஒரு சமூகத்தில் வழங்கப்பெறும் மிகவும் தொன்மையான இலக்கியம் என்பதைத் தெளிவுபடுத்தி விடுகின்றது. மக்கள் தம் வாழ்வியல் போக்கில் உலகியல் சார்ந்து ஏற்படும் அனுபவங்களைப் பிறர்க்குரைத்து அவர்களை அவர்களின் வாழ்க்கையைச் செழுமைப்படுத்துகின்ற நிலையில் அமைவனவற்றைப் பழமொழிகள் எனலாம். முன்னோர்தம் அறிவு, அனுபவம், உலக நோக்கு முதலிய பின்னணிகளில் இத்தகைய பழமொழிகளைத் தோற்றுவிக்கின்றனர். எனவே, இவற்றை அனுபவ மொழிகள் எனலாம்.(பே.சக்திவேல், தமிழில் பழமொழிகள், பேசும் புதிய சக்தி மாத இதழ்)*** என்று பே.சக்திவேல், பேசும் புதிய சக்தி மாத இதழ் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். பழமொழிகள் பெரும்பாலும் நட்டுப்புற மக்களின் வாழ்க்கையில் ஒன்றிய நிகழ்வாக உள்ளது. இதனை,

> ***மூதறிவிலிருந்து தோன்றிய மொழி பழமொழி. நினைப்பிற்கும் எட்டாத பழங்காலத்திலிருந்தே மக்கள் வாழ்வில் வாழ்ந்து வருபவை என்பதைப் பழமொழியிலுள்ள 'மொழி' என்னும் சொல் உறுதிப்படுத்துகின்றது.(சு.சக்திவேல், நாட்டுப்புற இயல், ப.13)***

என்று சு.சக்தவேல் எடுத்துரைக்கின்றார். பழமொழி மக்களின் அனுபவத்தை குறிப்பதோடு மட்டுமல்லாமல் ஒரு சமுதாயத்தின் அறிவுசார் வெளியிடாக அமைந்திருபதை,

> ***பழமொழி ஒரு சமூகத்தின் அறிவுசார் வெளிப்பாடு என்பதால் அதனை ஒரு சமுதாயத்தின் ஞானத்திரட்டு (தே.லூர்து, நாட்டார் வழக்காற்றில் சில அடிப்படைகள், ப.211)***

என்று தே.லூர்து, நாட்டார் வழக்காற்றில் சில அடிப்படைகள் என்ற நூலில் கூறியதன் மூலம் அறியலாம்.

**பழமொழியின் இயல்பு**

பழமொழியை, **முதுமொழி, முதுசொல்** எனக் குறிப்பிட்டுள்ள தொல்காப்பியர்.

***நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்***
***மென்மையும் என்றிவை விளங்கத் தோன்ற***
***குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்***
***ஏது நுதலிய முதுமொழி என்ப(தொல்காப்பியம், பொருளதிகாரம், பா.170)***

என்று தொல்காப்பியர் கூறியதன் மூலம் பழமொழியின் தன்மை நமக்கு புலனாகிறது. நுண்மை நுட்பமுடைமை, சுருக்கம் ஓரடி ஈரடியில் அரிய கருத்தை வெளிப்படுத்தல். ஒளியுடைமை - பளிச்சென்ற அறிவொளியின் வீச்சு. மென்மை மிக எளிமை. இவை யாவும் பழமொழியில் விளங்கித் தோன்றும். குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம் ஒரு குறிப்பிட்ட கருத்தை உணர்த்துவதற்குத் துணையாக வரும். **ஏதுநுதலிய —ஒரு சூழலில் (சந்தர்ப்பத்தில்) காரணம் காட்டுவதற்கு வரும் எனத் தெளிவாக விளக்கும் தொல்காப்பியர் பழமொழியின் அளவு, பண்பு, பயன்படுத்தும் நோக்கம், பயன்படுத்தும் சூழல் என அனைத்தையும் சுட்டுகிறார். (ஆறு.ராமநாதன், எழுத்திக்கியங்களும் வாய்மொழி இலக்கியங்களும், ப.27)** மேற்காட்டிய விளக்கங்களையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு நோக்கினால், நுணுக்கமும், சுருக்கமும் கொண்டு ஓரடி ஈரடிகளில் எளிமையாக, ஒரு குறிப்பிட்ட சூழலில் குறிப்பிட்ட ஒரு கருத்தை விளக்குவதற்குத் துணையாக எடுத்துரைக்கப் பெறும் இலக்கியமே பழமொழி என்பது விளங்குகின்றது. இவ்வாறு எடுத்துரைக்கப் பெறும் பழமொழி சமூகத்தின் நீண்ட வாழ்வியல் அனுபவத்திலிருந்து பிறப்பதால் இதில் அனுபவமும் அறிவும் ஒருசேர இடம் பெறும் என்பது தெரிகின்றது. கூகை புதினத்தில் பயன்படுத்தப்பட்ட பழமொழிகளான,

***கைக்கு எட்டனது வாய்க்கு எட்டல. (கூகை, ப.2)***
***ஆனைக்கு ஒரு காலம் வந்தா பூனைக்கும் ஒரு காலம் வராதா. (கூகை, ப.12)***
***அழுகல் பழம் தின்னுமா கிளி? (கூகை, ப.27)***
***உப்பு தின்னாச்சு தண்ணி குடிச்சு தான் ஆகணும் (கூகை, ப.73)***
***கைக்கு எட்டுனது வாய்க்கு எட்டாமப் போயிருச்சு. (கூகை, ப.100)***

***வழியில் போற சனியனை எதுக்கு விலை கொடுத்து வாங்கணும். (கூகை, ப.148)***

***அம்பட்டையன் குப்பையில மயிருதான் வரும். (கூகை, ப.149)***

***அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லம் பேய்னு. (கூகை, ப.153)***

***எலும்பு இல்லாத நாக்கு எங்கிட்டும் பேசும். (கூகை, ப.155)***

என அவர் புதினத்தில் கதை நிலைக்கு ஏற்ற அவ்வப்போது பழமொழிகளை கூறி கதையை நகர்த்தி செல்வது ஆசிரியருக்கே உரிய சிறப்பாகும்.

**மொழிநடை உத்தி**

மொழிநடை படைப்பாளர்களின் மனப்பான்மை, அவர் பெற்ற இலக்கிய, சமூக அறிவு, ஆகியவற்றைப் பொருத்தே சிறப்படைகிறது எனலாம். படைப்பாளரின் ஆழ்ந்தகன்ற அறிவின் வெளிப்பாடாக அமையும் ஒன்றாக மொழிநடை அமைகிறது. ஒவ்வொரு ஆசிரியரும் தமக்கென்று தனித்தொரு மொழிநடையைக் கொண்டுள்ளனர். வெண்பாவிற்கு புகழேந்தி, பரணிக்கோர் செயங்கொண்டான், அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன் என வரும் தொடர்கள் புலவர்களின் புலமைக்கும் அவர் மேற்கொண்ட யாப்பிற்கும் தக்கவாறு இவர்களுடைய நடை மாறக்கூடும் என்னும் உண்மையினை நமக்கு உணர்த்துவதை அறியலாம்.

***மொழியே எழுத்தாளன், எழுத்தாளனே மொழிநடை.(பரந்தாமன், நல்ல தமிழ் எழுத வேண்டுமா?, ப.390)***

என்ற கூற்றே மொழிநடையின் இன்றியமையாமையினை உணர்த்தும்.

படைப்பு மொழியைத் தீர்மானிப்பதில் ஆசிரியரின் வட்டாரச் சார்பும் முக்கிய இடம் பெறுகிறது. பொதுவான மொழியைக் கையாளும் போதும் ஆசிரியன் உணர்வில் ஒன்றிவிட்ட வட்டார மொழி பாத்திர உரையாடலில் கலந்து விடுவது தவிர்க்க முடியாதது. அதுவே வட்டார புதினமாக அமையும் போது புதினம் முழுக்க வட்டார வழக்குச் சொற்கள் இடம் பிடித்துவிடும்.

சரி, சரி,நீங்க எப்பிடியும் வாங்க, **வெருசனாக் கௌம்புங்க** நம்ம ஊரு ஆள்க்க எல்லாம் **போய்ட்டாகல்ல.**

**ஏல...** காக்காயா நிய்யி மத்தவுக கூடப் போ. நாங்க ரெண்டு பேரும் கொஞ்சம் **சாவாசமா** ஏறக்கொறையா வாரோம்.( கூகை, ப.1)

கேட்டாலும் கோயில்பட்டிக்கு வேற ஒரு **சோலியாப்** போறம்னு சொல்லிட்டு **கமுக்கமா** வெளியேறிப் போயிரணும். (கூகை, ப .3)

சீனி **பவ்யமாகக்** கும்பிட்டபடி நின்றான். யாரோ ஒரு கிழவன் உட்கார்ந்திருந்தான்.

**எந்தூர்ல நிய்யி?**

சாமி, சித்திரம்பட்டிச்சீனிக்குடும்பன்.

என்ன **வெசயம்ல** எசமான் வரச் சொன்னதா உத்தரவு கெடச்சது

அப்பிடியா,அப்ப இப்பிடி ஓரமா நில்லு. போயி **தாக்கல்** சொல்லிட்டு வாரன்"(கூகை,ப.66)

பொய்க் கேசாக் குடுத்திருக்கான்? **தாயிளி** அவன இன்னியும் **லாந்த விடலாமா**? (கூகை, ப.89)

**ஏட்டி ...யே ...** மாரி எந்திரிடி.' (கூகை, ப .146)

சீனி மாமா நல்ல **சௌக்யந்தானே?**

சௌக்யத்துக்கு என்ன கொறச்சல்? அய்யர் புண்ணியத்துல வயிறாரக் கஞ்சி கெடைக்குது. மொதல்ல வயித்துப்பாடுதான முக்கியம்?'

நீங்க ரெண்டு பேரும் சித்திரம்பட்டியிலேயே தல காட்டக் கூடாதுனா ஒரே **போக்காப் போய்ட்டீக?** (கூகை, ப.206)

ஒரு மொழியைப் பேசும் மக்களிடையே அதை உச்சரிக்கும் விதத்தில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணலாம். அவ்வகையில் பிற பகுதிகளில் பேசப்படும் தமிழிலிருந்து கரிசல் வட்டார தமிழும் வேறுபடுகின்றது. இவரின் புதினத்தில் அவர்கள் இடத்தில் மக்கள் பேசும் பேச்சு மொழியை அப்படியே புதினத்தில் கையாண்டு வெற்றி அடைந்துள்ளதை அறியமுடிகின்றது.

**முடிவுரை**

படைப்பிலக்கியத்தில் முக்கியப் பங்கு வகிப்பது உத்தியாகும். ஒரு மனிதன் தன்னிடம் இருக்கும் திறமைகளை வெளிப்படுத்தும் போது அவரின் வெளிப்பாட்டுத் திறன் வெளியாகிறது. சோ. தர்மன் அவர்கள் கூகை புதினத்தில் நோக்கு நிலை உத்தி, கதை கூறும் உத்தி, பின்னோக்கு உத்தி அல்லது நனவோடை உத்தி, குறியீட்டு உத்தி, கடித உத்தி, கனவு உத்தி, கற்பனை நிகழ்வியல் உத்தி, காட்சிப்படுத்துதல் உத்தி, வருணனை உத்தி, தென்மம் உத்தி, மொழிநடை உத்தி எனப் பல வகையான உத்திகளைக் கையாண்டு அவருடைய தனித் திறமையை வெளிக்காட்டியதைப் புதினத்திலிருந்து ஆராயப்பட்டுள்ளது. உத்தியின் மூலம் ஆசிரியரின் தனித்திறனை அறிய முடிகிறது.

**பார்வை நூல்கள்**


[1] அ.கி. பரந்தாமனார், *நல்ல தமிழ் எழுத வேண்டுமா?*. மலர் நிலையம், சென்னை, பதிப்பு ஆண்டு 1957.

[2] இளம்பூரணர்(உ.ஆ), *தொல்காப்பியம் பொருளதிகாரம்*, கழக வெளியீடு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி, பதிப்பு ஆண்டு — 1969.

[3] ச. சிவகாமி, *ராமாயணக் குறியீடு*. மாதவி பதிப்பகம், சென்னை, பதிப்பு ஆண்டு 1992.

[4] சி.சு. செல்லப்பா, *தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது.* காலச்சுவடு பதிப்பகம், 669கே.பி சாலை,நாகர்கோவில், பதிப்பு ஆண்டு 2016.

[5] செ. சாரதாம்பாள், *செவ்வியல்.* மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-625001,முதல் பதிப்பு - 2014.

[6] சோ. தர்மன், *கூகை.* அடையாளம் பதிப்பகம், 1205/1 கருப்பூர் சாலை, புத்தாநத்தம் திருச்சி — 621310, முதல் பதிப்பு -2017.

[7] டாக்டர் சு. சக்திவேல், *நாட்டுப்புறவியல் ஆய்வு.* மணிவாசர் பதிப்பகம்,31, சிங்கர் தெரு, பாரி முனை, சென்னை-600001, பதிப்பு ஆண்டு -2006.

[8] டாக்டர் ந. பிச்சமுத்து, *இலக்கியத் திறனாய்வும் கொள்கைகளும்.* சக்தி பதிப்பகம், சென்னை. பதிப்பு ஆண்டு -2008.

[9] தே. லூர்து, *நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்.* நாட்டார் வழக்காற்றில் ஆய்வு மையம், பாளையங்கோட்டை, பதிப்பு ஆண்டு 1997.

[10] பே. சக்திவேல், *தமிழில் பழமொழிகள்,* பேசும் புதிய சக்தி, மாத இதழ், திருவாரூர்.

[11] மு. சுதந்திர முத்து, *படைப்புகலை.* அறிவு பதிப்பகம், சென்னை 14, மதிப்பு ஆண்டு 2008.

[12] முனைவர் ஆறு. இராமநாதன். *எழுத்திலக்கியங்களும் வாய்மொழி இலக்கியங்களும்,* மெய்யப்பன்பதிப்பகம், 53, புது தெரு, சிதம்பரம்-608001.

*Reference Books*

[1] A.K. Paranthamanar, *Nalla Thamil Ezhutha Venduma?.* Malar Nilayam, Chennai, published in 1957.

[2] Ilampooranar (U.A). *Tholkappiyam.* Porulathikaram, Kazhaga Veliudu, South Indian Saiva Siddhanta Book Publishing Society Limited, Tirunelveli, Year of Publication 1969.

[3] S. Sivagami, *Ramayana Kuriyitu.* Madhavi Pathippakam, Chennai, Year of Publication 1992.

[4] C.S. Chellappa, *Tamil Sirukathai Pirakkirathu.* Kalachuvadu Pathippakam, 669 K.P. Road, Nagercoil, Year of Publication 2016.

[5] C. Saradhambal. *Sevviyal,* Meenakshi Puththaka Nilaiyam, Madurai-625001, First Edition - 2014.

[6] Cho. Dharman, *Kookai.* Adaiyalam Pathippakam, 1205/1 Karuppur Road, Putthanatham, Trichy — 621310, First Edition 2017.

[7] Dr. S. Sakthivel, *Nattuppuraviyal Aaivu*. Manivasar Pathippakam, 31, Singer Street, Pari Point, Chennai-600001, Publication year 2006.

[8] Dr. N. Pichamuthu, *Ilakkiya Tiranayvum Kolkaium*. Shakti Pathippakam, Chennai, Publication year 2008.

[9] T. Lurdhu, *Nattar Valakkariyal Sila Atippataikal*. Nattar Valakkariyal Ayvu maiyam, Palayankottai, Publication year 1997.

[10] Professor Dr. Po. Sakthivel, *Tamilil Palamozhikal*. Pesum Puthiya Sakthi, Monthly Journal,Tiruvarur.

[11] M. Sudantira Muthu, *Pataippukalai*. Aruv Pathippakam, Chennai 14, Publication year 2008.

[12] Dr. Aru. Ramanathan, *Eluththu Ilakkiyangalum Vaimozhi Ilakkiyangalum*. Meiyappan Pathippakam, 53 Pudu Street, Chidambaram 608001.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com